**விஸ்வதீப்தி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி**

**இரண்டாம் வகுப்பு தமிழ் இரண்டாம் பருவம்**

**கற்றல் பயிற்சித் தாள்**

**செய்யுள் : உலக நீதி**

**I. பொருள் தருக:**

1. மாதா - தாய்
2. இணங்க - சேர
3. ஓதாமல் - படிக்காமல்
4. வஞ்சனை – தீய செயல்கள்
5. பொல்லாங்கு - குற்றம் குறை
6. அஞ்சாமல் - பயப்படாமல்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. **தீய** செயல்கள் செய்பவரோடு சேரக்கூடாது.
2. உலகநீதி பாடலின் ஆசிரியர் **உலகநாதர்.**
3. செல்லத்தகாத இடங்களுக்கு **செல்லக்** கூடாது.
4. யாரைப் பற்றியும் **குறை** கூறக்கூடாது.
5. **படிக்காமல்** ஒருநாளும் இருக்கக் கூடாது.
6. அன்புமிகு **அம்மாவை** மறக்கக்கூடாது.

**III. பொருத்துக:**

| | | | |
|---|---|---|---|
| 1. இணங்க | - | குற்றம் குறை | 3 |
| 2. மாதா | - | சேர | 1 |
| 3. பொல்லாங்கு | - | தாய் | 2 |

**IV. வினாவிற்கு விடை எழுதுக:**

1. யாரை மறக்கக்கூடாது?

**அன்புமிகு அம்மாவை மறக்கக்கூடாது.**

2.ஒரு நாளும் இருக்கக் கூடாது எது?

**படிக்காமல் ஒருநாளும் இருக்கக் கூடாது.**

3.யாரோடு இணங்க கூடாது?

**தீய செயல்கள் செய்பவரோடு இணங்கக் கூடாது.**

4.உலகநீதி மனப்பாடப் பகுதியில் முதல் மூன்று எழுதுக:

**ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்.**

**ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.**

**மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.**

## செய்யுள் - பாப்பா பாட்டு

**I. பொருள் தருக:**

1. ஓய்ந்திருக்க - சோம்பி இருக்க
2. வையாதே - திட்டாதே
3. கனிவு - மகிழ்ச்சி
4. புறஞ்சொல்லல் - கோள் சொல்லுதல்
5. வைரமுடைய - உறுதியுடைய
6. முறைமை - வழக்கம்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. காலை எழுந்தவுடன் **படிப்பு.**
2. **பொய்** சொல்லக்கூடாது பாப்பா.
3. பாப்பா பாட்டு பாடலின் ஆசிரியர் மகாகவி **பாரதியார்.**
4. **உயிர்களிடத்தில்** அன்பு காட்ட வேண்டும்.
5. குழந்தையை **வையாதே** பாப்பா.

6. **<u>வைரம்</u>** போன்ற நெஞ்சம் வேண்டும்.

7. கனிவு கொடுக்கும் நல்ல **<u>பாட்டு</u>**.

**III. எழுத்துகளை முறைப்படுத்தி சொல்லாக்குக:**

1. யாதேவை - வையாதே
2. புன்அ - அன்பு
3. ப்படிபு - படிப்பு
4. குந்ழதை - குழந்தை
5. தெவம்ய் - தெய்வம்
6. வியாளைடுட்- விளையாட்டு

## உரைநடை : தமிழ்நாட்டுப் பண்டிகைகள்

**I. பொருள் தருக:**

1. வழிபாடு - வணங்குதல்
2. உழவுத்தொழில் - பயிர்த்தொழில்
3. தொழுவம் - மாடு கட்டும் இடம்

**II. எதிர்ச்சொல் எழுதுக:**

1. பெரியோர் × சிறியோர்
2. ஒற்றுமை × வேற்றுமை
3. புதுமொழி × பழமொழி
4. புதுப்பானை ×பழைய பானை
5. மகிழ்ந்து × வருந்தி

**III.கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. மும்மத தமிழ் மக்களும் மகிழ்ந்து கொண்டாடும் பண்டிகை **<u>பொங்கல்.</u>**
2. மாடுகளுக்கு **<u>நன்றி</u>** தெரிவிக்கும் விதமாக மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுகிறது.
3. இஸ்லாமியர் கொண்டாடப்படும் நோன்பு **<u>ரமலான்.</u>**

4. கிறிஸ்தவர்கள் புத்தாடை அணிந்து **<u>தேவாலயம்</u>** சென்று வழிபடுவர்.

5. நம் தமிழ்நாட்டை **<u>பாரதி</u>** மகிழ்ந்து பாடுவான்.

6. எம்மதமும் சம்மதம் என்பது **<u>பொன்</u>** மொழி.

7. மும்மதமும் சம்மதம் என்பது **<u>புது</u>** மொழி.

**IV. பொருத்துக:**

| | | | |
|---|---|---|---|
| 1. முதல் நாள் | - | காணும் பொங்கல் | 3 |
| 2. இரண்டாம் நாள் | - | சூரிய பொங்கல் | 1 |
| 3. மூன்றாம் நாள் | - | மாட்டுப்பொங்கல் | 2 |
| 4. கிறிஸ்துமஸ் | - | மசூதி | 5 |
| 5. இஸ்லாமியர் | - | இயேசு | 4 |

**V. வினாக்களுக்கு விடை எழுதுக:**

1. மும்மதம் என்பன யாவை?

**மும்மதம் என்பன இந்து கிறிஸ்தவம் இஸ்லாம்.**

2. தைப்பொங்கல் விழாவை ஏன் கொண்டாடுகிறோம்?

உழவுத் தொழிலுக்கும் சூரியனுக்கும் மாடுகளுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் தைப்பொங்கல் கொண்டாடுகிறோம்.

3.ரமலான் நோன்பு ஏன் கொண்டாடப்படுகிறது?

**செல்வந்தர் தாங்கள் தேடிய செல்வத்தில் ஒரு பகுதியை ஏழை எளியவர்களுக்கு கொடுத்து மகிழும் திருநாளே ரமலான் நோன்பாக கொண்டாடப்படுகிறது.**

4. மும்மதத்து மக்களும் கொண்டாடும் பண்டிகை எது?

**மும்மதத்து மக்களும் கொண்டாடும் பண்டிகை பொங்கல்.**

## செய்யுள் : புதிய ஆத்திசூடி

**I. புதிய ஆத்திசூடி பாடலில் முதல் மூன்று எழுதுக:**

- அச்சம் தவிர்.
- ஆண்மை தவறேல்.
- இளைத்தல் இகழ்ச்சி.

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. ஏறு போல் நட.
2. வீரத்தை விட்டு விடாதே.
3. பயத்தை நீக்க வேண்டும்.
4. புதிய ஆத்திசூடி ஆசிரியர் பாரதியார்.
5. உடலை உறுதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

**IV. வினாவிற்கு விடை எழுதுக:**

1. எதைத் தவிர்க்க வேண்டும்?

**கோபத்தைத் தவிர்க்க வேண்டும்.**

2.எதைப் போன்று நடக்க வேண்டும்?

**சிங்கத்தைப் போல் செம்மாந்து நடக்க வேண்டும்.**

3.எதை உறுதி செய்ய வேண்டும்?

**உடலினை உறுதி செய்ய வேண்டும்.**

4.புதிய ஆத்திச்சூடியின் ஆசிரியர் யார்?

**புதிய ஆத்திச்சூடியின் ஆசிரியர் மகாகவி பாரதியார்.**

5.எதை மிக விரும்ப வேண்டும்?

**சத்தான உணவை உண்ண விரும்ப வேண்டும்.**

6.நம் எண்ணம் எவ்வாறு இருக்க வேண்டும்?

**நம் எண்ணம் உயர்வானதாக இருக்க வேண்டும்.**

7.எது இகழ்ச்சியைத் தரும்?

**உடல் மெலிதல் இகழ்ச்சியைத் தரும்.**

## உரைநடை: மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்

**I. பொருள் தருக:**

1. கோடை காலம் - வெயில் காலம்
2. தூளி - ஊஞ்சல்
3. தைலம் - திரவ மருந்து
4. வாழைத்தார் - வாழைக்குலை
5. விண்ணில் - வானத்தில்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. மரம் வளர்ப்போம் **மழை** பெறுவோம்.
2. **பிறப்பு** முதல் இறப்பு வரை மரங்களை பயன்படுத்துகிறான்.
3. மரங்கள் இல்லையேல் **மழை** இல்லை.
4. உலகத்தில் மூன்றில் **ஒரு** பங்கு காடுகள் உள்ளன.
5. நீராவிகள் வானத்தில் சென்று **மேகமாக** மாறும்.
6. மழைநீர் இன்றி **உலகம்** இயங்காது.
7. கண்ணன் **இரண்டாம்** வகுப்பில் படிக்கிறான்.
8. மரங்கள் சேர்ந்தது **வனம்.**
9. பனை மரத்தை பூலோக **கற்பகத்தரு** என்று போற்றுவர்.

**III. சரியா தவறா என எழுதுக:**

1. கண்ணன் படிக்கும் பள்ளிக்கு சொற்பொழிவாளர் வந்தார். -சரி
2. மழைநீர் இன்றி இந்த உலகம் இயங்கும். - தவறு
3. வாழைமரம் இரண்டாம் நண்பனுக்கு உவமையாக கூறினார். - தவறு

**IV. வினாக்களுக்கு விடை எழுதுக:**

1. நிழல் தரும் மரங்கள் இரண்டினை எழுதுக?

- **வேம்பு**
- **புங்கு**

2. பயன் தரும் மரங்கள் நான்கினை கூறுக?

- பனை
- பலா
- தென்னை
- வாழை
- மா

3.முதல் தர நண்பனுக்கு எடுத்துக்காட்டு எம்மரம்?

**முதல் தர நண்பனுக்கு எடுத்துக்காட்டு பனைமரம்.**

4.வேப்பமரம் கண்ணனுக்கு எதை தந்தது?

**வேப்பமரம் கண்ணனுக்கு குளிர்ச்சியையும், மகிழ்ச்சியையும் தந்தது.**

5.மூன்றாம் தர நண்பன் எதைப் போன்றவன்?

**மூன்றாம் தர நண்பன் வாழை போன்றவன்.**

## அன்றாடம் செய்ய வேண்டுவன

**I. விடுபட்ட எழுத்தை நிரப்புக:**

1. க வி தை
4. பே ண ல்
2. நா ள் தோறு ம்
4. ஆ டல்
3. வெ ற்றி
5. எ ழு துதல்

**II. ஒத்த ஓசையுடைய சொற்களை எழுதுக:**

1. காலை - மாலை
2. சோலை - வேலை
3. பெற்றோர் - பெரியோர்
4. மதித்தல் - படித்தல்

**III. வினாக்களுக்கு விடை எழுதுக:**

1. எப்பொழுது விளையாட வேண்டும்?

**மாலையில் விளையாட வேண்டும்.**

2. நீக்க வேண்டியது எது?

**சோம்பலை நீக்க வேண்டும்.**

3. நாள்தோறும் படிக்க வேண்டியது எது?

**நற்றமிழ்க் கவிதையை நாள்தோறும் படிக்க வேண்டும்.**

4. எவ்வாறு கற்றல் வேண்டும்?

**மகிழ்வுடன் கற்றல் வேண்டும்.**

5. யாரைப் பேணல் வேண்டும்?

**பெற்றோரைப் பேணல் வேண்டும்.**

## இலக்கணம்

**I. வகர வரிசை எழுத்துகளை எழுதுக:**

**வ வா வி வீ வு வூ வெ வே வை வொ வோ வௌ**

**II. குறிலை நெடிலாக மாற்றி எழுதுக:**

1. கலை - காலை
2. மலை - மாலை
3. அணி - ஆணி
4. வண்டு - வாண்டு
5. பல் - பால்

III. **நெடிலைக் குறிலாக மாற்றி எழுதுக:**

1. காடை - கடை
2. வாடை-வடை
3. மாடி - மடி
4. வானம் - வனம்
5. ஆலை-அலை
6. பாடி - படி

IV. **வினாக்களுக்கு விடை தருக:**

1. குறில் எழுத்துகள் மொத்தம் எத்தனை?

**குறில் எழுத்துகள் மொத்தம் ஐந்து**

2.நெடில் எழுத்துகள் மொத்தம் எத்தனை?

**நெடில் எழுத்துகள் மொத்தம் ஏழு.**

V. **பொருத்தமான ல ள ழகர சொல்லை கொண்டு நிரப்புக:**

1. ஆற்றில் ஓடுவது **வெள்ளம்** (வெள்ளம் / வெல்லம்)
2. நிலவு தருவது **ஒளி** (ஒலி, ஒளி)
3. காட்டில் வாழ்வது **புலி** (புலி, புளி)
4. பசு தருவது **பால்** (பால் பாழ்)

VI. **பொருத்தமான ர, ற ஒலியறிந்து எழுதுக:**

1. கல்வி கரையில (கரை கறை)
2. வெள்ளை ஆடை கறை படிந்துள்ளது (கரை கறை)
3. மரை என்பது மானை குறிக்கும் (மரை,மறை)
4. வேகத்தை குறிக்கும் சொல் மறை (மரை,மறை)
5. அம்மா காய்கறி சமைத்தாள். (கரி கறி)
6. வாசலை மறைப்பது திரை (திரை திறை)
7. நாய் நன்றாய் குரைக்கும். (குரைக்கும் குறைக்கும்)

**VII.சுவையறிந்து பொருத்துக:**

1. இனிப்பு - எலுமிச்சை 4
2. கார்ப்பு - பாகற்காய் 3
3. கசப்பு - பாக்கு 6
4. புளிப்பு - லட்டு 1
5. உவர்ப்பு - மிளகாய் 2
6. துவர்ப்பு - உப்பு 5

**VII. இரண்டாம் எழுத்தை நீக்கி புதிய சொல் உருவாக்குக:**

1. சகடம் - சடம்
2. பரதம் - பதம்
3. பாட்டு - பாடு
4. பாவனை - பானை
5. பட்டி - படி
6. பழசு - பசு
7. பத்தி - பதி
8. வாழை - வா
9. பண்டை - படை
10. கவலை - கலை

**VIII. பின்வரும் சொற்களில் உயர்திணை அஃறிணை சொற்களை பிரித்து எழுதுக:**

( அரசன் , ஆடு , நிலா , ஓட்டுநர் , தாத்தா , வீடு , பேருந்து , கப்பல் , குதிரை , மாணவன் , மரம் , நண்பன் கடல் , அப்பா , பாட்டி , சிறுவன் )

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| அரசன் | ஆடு |
| ஓட்டுநர் | நிலா |
| தாத்தா | வீடு |
| மாணவன் | பேருந்து |
| நண்பன் | கப்பல் |
| அப்பா | குதிரை |
| பாட்டி | மரம் |

## IX. விலங்குகள் பறவைகளை வகைப்படுத்தி எழுதுக:

(ஆந்தை, சிங்கம், பென்குயின், யானை, வாத்து, சிறுத்தை, நாய், கோழி)

| விலங்குகள் | பறவைகள் |
|---|---|
| சிறுத்தை | பென்குயின் |
| நாய் | வாத்து |
| யானை | கோழி |
| சிங்கம் | ஆந்தை |

## X. சரியான வருணனைச் சொற்களைக் கொண்டு நிரப்புக

1. சுவையான பழம்.
2. சிவப்பான ரோஜா.
3. மூவர்ணக் கொடி.
4. ஆழமான கிணறு.
5. வயதான பாட்டி.
6. பெரிய மரம்.
7. சிறிய பையன்.
8. வட்டமான வளையல்.

## XI. தமிழில் மொழி பெயர்த்து எழுதுக:

1. Banana tree - வாழைமரம்
2. Jackfruit tree - பலாமரம்
3. Jasmine - மல்லிகைப்பூ
4. Lily flower - அல்லிப் பூ
5. Lotus - தாமரை
6. Neem tree - வேப்பமரம்

## XII. சொல்லை மாற்றி எழுதுக:

1. கீரை **கீரைக்காரர்**
2. பால் **பால்காரர்**
3. பூ **பூக்காரர்**
4. கடை **கடைக்காரர்**
5. உதவி **உதவியாளர்**
6. ஆய்வு **ஆய்வாளர்**

## XIII. படம் பார்த்து பெயர் எழுதுக:



கரும்பலகை



மேசை



மாதுளை



வெண்டைக்காய்



மாம்பழம்



கடல்